419

உ

வேலுமயிலும் துணை

JUL 1922

மாநாடு தண்டுப்பத்து

மக-ா-ா-ஸ்ரீ

சோமசுந்தர நாடாரவர்கள் குமாரர்

மக-ா-ா-ஸ்ரீ

செல்லத்துரை நாடாரென்ற

ஆறுமுகப்பெருமாள் நாடாரவர்கள்

இயற்றிய

செல்வரஸகீர்த்தனம்

இஃது

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரசில்

பதிப்பிக்கப்பெற்றது

1922

லை] [அணு 3

துந்துபிவரு

NR4
N122
125849

உ

வேலுமயிலுந்துணை

மாநாடுதெண்டுப்பத்து

சா. செல்லத்துரை நாடாரவர்கள்

இயற்றிய

செல்வரஸ கீர்த்தனம்

கணபதி துதி

நேரிசை வெண்பா

ஆலலே யலங்காரச் செல்வரஸ கீர்த்தனத்தைச்
சாலவே செந்தமிழாற் சாற்றுதற்கு—கோலமயில்
கந்தனுக்கு மூத்த கரிமுகவன் பொன்னடியை
சிந்தையே எந்நாளுஞ்செபி

இராகம்—பைரவி—தாளம்—ஆதி.

பல்லவி

பார்வதிகுமாரா பரமனருள் சேயா
பாலன்துதிபாராயா பரகதிதாராயா (பா)

அநுபல்லவி

ஐந்துகரத்தோனே அங்குசபாசனே
நெஞ்சிற்குடிகொண்டோனே நீலமேனியோனே (பார்)

சரணம்

உவட்டாயுபதேசம் புகட்டியென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டிச்
செல்லத்துரைக்கருள் நேராய் புரிந்திட
செல்வீரிஸகீர்த்தனம் சீராய்ப் பாடிட
செகமெல்லாந்துதிக்கும் பாராய் கார்த்திட (பார்)

இராகம்—கல்யாணி—தாளம்—ஆதி

பல்லவி

இனியருள்வாயே இசைமடந்தையே
இன்னுதகற்றி இன்பந்தோற்றி அன்புவைத்து
என்னுயிர்காத்து (இனி)

அநுபல்லவி

பரிபுரநவமணிக ளார்க்குங்கிண்கிணி
பாதிமதியணி ஜோதியானமணி (இனி)

சரணம்

ஆண்டருள் கமலத் தன்னையேவாணி
வேண்டினேனுன்னை நித்யகல்யாணி
பூரணி புராதனி புரந்தனி பத்மாசனி
சொற்றமிட்செல்லத் துரைசொல்லும்
நற்றமிழ்தனக்கு நல்வரமநல்க (இனி)

ஸ்ரீரெகுவரசுகுணு-யென்ற தியாகராஜ கீர்த்தனை மெட்டு

இராகம்—பைரவி—தாளம்—ஆதி

பல்லவி

ஸ்ரீரெகுபதி ராம் ராமா
அச்சுதா ராமா
ஸீதைகொண்டாடும் ராமா
ஜகத்துதித்த ராமா (ஸ்ரீரெகுபதி)

அநுபல்லவி

மத்ஸ்ரூபமெடுத்த மாதவனே ராமா
மதுகைடவனைத் தீர்த்தவா
விஷ்ணுஸ்வரூப (ஸ்ரீரெகுபதி)

சரணம்

செந்திற்குகந்த கந்தனின்மாமா
சேய்செல்லத்துரையை
சீராக்ஷித்த (ஸ்ரீரெகுபதி)

மருக்கேலரா-என்ற தியாகராஜ கீர்த்தனை மெட்டு

இராகம்—ஜீயந்தசிரீ—தாளம்—ஆதி

பல்லவி

மதுரா மீனாட்சி மகிழ்ந்தென்னையாட்சி (மது).

அநுபல்லவி

தாயேதயைபுரி யுனையானம்பினேன்
தாசன் செல்லத்துரையை தேவி காப்பாற்றுவாய் (மது).

சரணம்

தொல்லுலகெங்குந் துதித்திடும் நாரியே
சோமசேகரனுளுஞ்
சொருகுசுவொய்யாரியே.

[அநுபல்லவி யெடுப்பு]

மாயோன் சகோதரியே சொக்கர் மனைவியே
மனம்வைத்தெனையாழ்வாய் மனக்காட்சி தருவாய் (மது).

வடிவேலா விகிசித—என்ற மெட்டு

இராகம்—பியாகு—தாளம் ஆதி

பல்லவி

முருகையனே யனுதினந்துதிபுரிவேணிங்கு
வாராயா வந்தேயெனைக்
காராயா சுகமதைத்
தாராயா கடைக்கண்ணுற்
பாராயா (முரு)

அநுபல்லவி

திருவருள் செய்குவாய் தேவா சண்முகா
தினைக்கானக்குறமானைத் தாவிய குகா
திறமுடன் வருவாய் திரியுரியாறுமுகா
தினந்தினங் காப்பாய் ஸ்ரீயரிமருகா (முரு)

சேவைதரவுமேதோ சிறிதும் மனம் வாராதோ
சிங்காரமயிலேறியிதோ சேவைதரவாதோ
செப்பக்கவலையின்றி எப்போதுமே மகிழும்
செப்பிடுஞ் செல்லத்துரை தப்பிதமதை யகற்று (முரு)

தாசிகளினுறவாகாது—என்ற மெட்டு

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி

பல்லவி

கந்தன்வருகிறார் பாராய் ஒய்யாரமாக (கந்த)

அநுபல்லவி

வள்ளி தெய்வானையிரு பக்கமிருக்கவே
புள்ளி மயின்மீது அமர்ந்திருக்கவே
அள்ளியே விபூதியா லலங்கிருதி செய்யவே
தெள்ளியரெல்லோருந் தெளிவுடன் போற்றவே(கந்)

சரணம்

பாங்குடனாரம் பதக்கமாலை பளபளவென்றிலங்க
தங்கக்கிரீடம் தோரணமாலை தளதளவென்று மின்ன
தங்கச்சப்பரம் தங்கியகந்தன் எங்கும்பிரகாசிக்க
சங்குநாதம் பம்பம்மென்று எங்குமுழங்க
மேளதாளம் மில்ட்டேரி பேன்று வாத்தியம் தம்புரு
பரமானந்த
மத்தளம் பிட்டில் ஹார்மோனியம் புல்லாங்குழல் முகவீணை
எல்லோரும் புகழ்

தேவாரம் பாடுந்திருவாசக மருட்பா திருப்புகழ் பாடிடும்
சிங்காரியான
தாசிவேசி கச்சைகட்டி சதுராடிபாடி வருவதைக்கண்ட
செந்திலாதிபன்
சித்தமகிழ்ந் துறவாட செகமெல்லாம் புகழ்ந்திட
நித்தமருள் புரிந்திட நோய் சுயம் பாடிட
செல்லத்துரை தன்னுட சுரமண்டலம் வாசித்திட
செந்திலாதிபன் தன்னுட மனங்கொண்டு நேசித்திட (கந்)

சாட்சி கண்காட்சியே—என்ற மெட்டு

இராகம்—தேசிகம்—தாளம்—ரூபகம்

பல்லவி

வடிவேலரசே நான் வருத்தஞ் சகிக்கமாட்டேன் (வடி)

அநுபல்லவி

வாவா வள்ளிக்கணவா வருந்துயர் தீர்ப்பவா (வடி)

சரணம்

அருணகிரிக்குமன் றருள்கொடுத்தாயோ
அவுணர்கள் படைதன்னை யறக்கெடுத்தாயோ
மாயமாகவே யிம் மைமக்கனை மறந்தயோ
மாமயில் மீதேறி யெங்கனம் பறந்தயோ
மீட்டியசூர் வேலினாலே சூரனை—வென்ற
நின்னுடைய வல்லமையை சொல்லவோ—யிங்கு

நாட்டிலுள்ள வுன்னடியார் எத்தனையோ—சொல்ல
நானதிலே அந்தரங்கப் பக்தனல்லவோ
சொல்லானந்தம் நீக்கிடும்
சொல்லின்பந் தந்திடும்
சொல்வன்மை யுதித்திடும்
செல்லத்துரை துதித்திடும்—ஷண்முக(வடி)

அக்கனுலாய மனுவா—என்ற மெட்டு

இராகம்—தேசிகபியாக்—தாளம்—ரூபகம்

பல்லவி

கருணையின்னமுமில்லையோ—குகா
உத்தமனே உன்னைநம்பி இத்தனைநாள் காத்திருந்தும் (கரு)

அநுபல்லவி

அன்னை குறவள்ளி மோகமோ யிதென்ன
யாரென்றறியாச்சூது—போதும்
பெண்ணுனக்கே னிந்தவருத்தம்
கொஞ்சமுமெண்ணமல் செய்வதோ பொருத்தம்(கரு)

தொகையறு

வாருமென்றுனையே மனத்தினில் நினைந்தால்
வந்திடில் அடியேன் முன் கந்தா
தாருமென்றுனையே கேட்ட நல் வரமும்
தாட்சியில்லாமலே கொடுப்பாய்

[அநுபல்லவி யெடுப்பு]

சேயன் செல்லத்துரை—யுனை
செப்புந்துதிக் கருள்புரிந்து செகமெங்கும் புகழ்ந்திட (கரு)

மைகேந்தபேக் குருபான்—என்ற மெட்டு
இராகம்—தேசிக கமாஸ்—தாளம்—ஆதி

பல்லவி

வள்ளிதெய்வ மோகனு வந்தருளுங்காரணு (வள்)

அநுபல்லவி

ஆலகால விண்டோன் மெய்யா
அங்கயற்கணுமை துய்யா (வள்)

சரணம்

செங்கை வள்ளி தன்பாகன்
கிரிமிசையமர் யோகன்
நங்கை மோகனே
மத்தகனுக் கிளைய நீதா
நித்திய சுத்தமலர்ப் பாதா
முத்திநெறிக் கருணை தாதா
முத்துக்குமரேசா
உன்னருள் பெருமலின்னம் முறையிடவோ தொல்லையே
(வள்)

கருணைபுரி போதா
பாவுந்திரு நீதா
கந்தனே
மிருது மயிலேறி
வரமிக வேதேசி
குருவே யெனைப்பாரீர்
முருகோனே
சித்தம்வைத்து செல்லத்துரை பத்தம்வைத்தேன் தேசிகனே (வள்)

ஆண்டிப்பண்டாரம்—என்ற மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

ஆறுமுகவனே என்னை
ஆதரிக்குங்கோனே திரு (ஆறு)

அநுபல்லவி

சிந்தனை புரிந்தவர்கள் சந்தமே யகன்றிடவும்
செஞ்சேவற் கொடிபிடித்துச் சிகிமீதமர்ந்த குரு (ஆறு)

வாருநற் சமையந்திரு வள்ளி தெய்வானை யென்றிரு
வஞ்சிகளுடனெந்நாளுஞ் செந்திநகர் தன்னில்வாழும்(ஆறு)

என்னிரண்டு கண்ணேயிவ் வேழை படுந்துன்பமெல்லாம்
பன்னிரண்டு கண்ணிருந்தும் பாராதிருப்பதேனோ (ஆறு)

புள்ளிமயி லேறிவரும் வள்ளி மணவாளனே
வண்ண முகவழகா அடியேனைக் காருமையா (ஆறு)
செந்திநகர்ப்பதியானே செஞ்சேவற் கொடியானே
செல்லத்துரை போற்றுஞ் செஞ்சடைவேல் முருகா (ஆறு)

கொந்தாரும் பூங்கணையால்—என்றமெட்டு

இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி

பல்லவி

சாமி—கந்தாவுன் மகிமைபோலுண்டோ
ஜீவ—காருண்யனே
தேவ—சற்குணனே
காவா—சுப்ரமண்யனே—செந்தூர் [கந்]

அநுபல்லவி

கோலாகலனே சீலா குறத்தி தெய்வானை லோலா
கோலனே மயில் வாகனு—வள்ளிமோகனு
அருள் காரணு—குணவாளனே
செந்தூர்க்—கந்தாவுன்னை நான்பாட
சங்கரன்—மைந்தா யென்னை நீநாட
உன்—சித்தமுற்ற யென்கவலை
பத்தம் வைத்து திரின்னோம்
என்குல—மகிழ்ச்சியை
வந்தழகு—உடன்புகழ்ந்த [கந்]

சொல்லலங்கார துரை சோ செல்லத்துரை
சோமசுந்தரன் பாலன்—சுயகிர்தன்
சுகவாசன்—சுபயோகன்
உந்தன்—பாதம் நம்பினேன் மோட்சம்
இந்த—ஆதலின்பக் கடாட்சம்
தினம்—பாவட்சிய மேயருள்
சாட்சியே தரும்
கொண்டலார் குழல் கெண்டைபோல் விழி
கொங்கையாள்சுற மங்கை வாழ்நிரு [கந்]

சரிசரிசாமுத்ரிகாலக்ஷணம்—என்ற மெட்டு
இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி

பல்லவி

சாமியே சிவசுப்ரமண்யனே கார் [சாமி]

அநுபல்லவி

செந்திமாநகர் தன்னில் மேவிய
கந்தசாமி எங்கும் நேமி [சாமி]

சரணம்

மலைக்குறவள்ளியை மணந்திடும் வேலவன்
அலைகடலோரமா யிருந்திடு மனுகூலன்
அலங்காரியின் மோகன்—பெண்
வலையிற்சிக்கிய போகன்—பண்

அலையுமனத்தைப் பிடித்து வைத்து
அறிவையுருட்டித் திரட்டி வைத்த [சாமி]
அகிலாண்டகோடி போற்றும் அகிலைவரிக் கண்ணியன்
அகிலாண்டவல்லியீன்ற ஐயன் சுப்பிரமணியன்
அம்புஜவாகனன்—அங்கு
ஆறுமுகமானவன்—இங்கு
மெத்தவுமே நம்பினேன்
சித்தமிக வெம்பினேன் [சாமி]
தண்டுப்பத்தூரில் வாழும் தாசன் செல்லத்துரையை
கண்டு மனமகிழும் கார்வண்ணன் மருகா
வேண்டினேன் முருகா—உனை
யண்டினேனருகா—எனை
நித்தமுமே காத்து
சித்தமுமே வைத்து [சாமி]

மதனமே மோராசையா——என்ற மெட்டு

இராகம்—அமீர் கல்யாணி—தாளம்—ரூபகம்

பல்லவி

தினைக்கானக் குறமானைத் தேடியலோலா
மானைத் தேடியலோலா [தினை]

அநுபல்லவி

தந்தைக்கு மந்திரம் சாற்றுங் குருநாதா [தினை]

தொஹரு

அனுதினமு நானே நம்பினே னுன்னை
அருள்புரிந்தாதரிப்பாய்
பணிமதியாவு மாலையா யணிவரய்
பாடவு நாவினுலெழுதாய்

(பாட்டுத் தொடர்)

கரத்தினில் வடிவே லெடுத்திடுந்துரையே
சரவணபவனே செல்லத்துரையை

[பல்லவி யெடுப்பு]

நேராக வந்தாதரி யீசா றுகையா
தினைக்கானக் குறமானைத் தேடியலோலா [தினை]

பங்காருமோரிப் பியாரி—என்ற மெட்டு

இராகம்—கல்யாணி—தாளம்—ஆதி.

பல்லவி.

கூர்வடிவேலா குறக்குல மாதுடன் கூடிடும் லோலா [கூர்]

அநுபல்லவி.

சீர்கலை சூழ்ந்திடும் செந்தூர் தெக்குவாயில்
பெருமையாயமர்ந்திடும் சூரசம்மாரு
கருணை வைத்திடும் கார்வண்ணன் மருகா
காத்தருளளித்திடும் காருண்யனருகா [கூர்]

ஆறுமுகா யென்னைக் காருங்காருமையா
வாரு நற்சமையம் வள்ளிதெய்வானையுடன்
வாரும் வாருமையா வந்தென்னைப்பாரும்
சீராயமர்ந்தீரய்யா செந்திநகர் சீலா [கூர்]

செந்தில்மாநகர் வாசாவரமருள்
செய்வாய்செங்கை வேல்முருகா
செல்லத்துரை துதிக்குஞ் ஜெயமணி வீரா
சேவற்கொடிபிடிக்குஞ் சிரசாறுமுகா [கூர்]

மாரன் வார்தையாலே—என்றமெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ரூபகம்.

பல்லவி

அய்யன் சுப்ரமண்யனே [அய்யன்]

அநுபல்லவி

அன்னமயிலேறி யிங்குவருங் குமரகுருவே [அய்யன்]

சரணம்.

ஆறுமுகா யென்னை ஆதரித்திடுவாயே
அன்புடனே மனம் வைத்திடுவாயே
ஆசையிடனேர் மொழி சாத்திடுவாயே
அன்னைகுற வள்ளியின்மே லாசைவைத்திடுந்திரு [அய்]

செந்தின்மாநகரில் வாழ்ந்திடுங் கண்யனே
சித்தம் வைத்தெனைப் புகழ்ந்திடும் புண்யனே
செல்விநாதன் மருகாசீர் தந்திடுங் கந்தனே
செல்லத்துரை போற்றுஞ் செந்தமிழுக் கிரங்கிடுந்திரு.
[அய்]

தாசானபோலுதாரா—என்ற மெட்டு
இராகம்—தேசிக தோடி—தாளம்—ஆதி

பல்லவி

வா காப்பாய் வடிவேலா [வா]

அநுபல்லவி

வண்ணமயில் ஏறியவேல் [வா]

சரணம்

மாதாபிதா குருவே
மைந்தன்மேல் கிருபை செய்யே
மண்டலத்திலுள்ள தொண்டர்கள் யாவரும்
மனக்கோரிக்கையை வந்து நிறைவேற்ற [வா]

தொகையறா

மண்ணிற் பிறந்துன் மலரடிக்காளாய்
வந்திலாச்செனனமேச் சென்மம்
வெண்ணிலாவுமிழும் வேற்கரம் பிடித்த
மெய்யனே ஆறுமாமுகனே.

[சரணத்தொடர்]

செல்வர் கொண்டாடுஞ் சிங்கம்
செல்லத்துரை போற்றும் லிங்கம்
சோலைதருகானிற் கோலக்குறமானைத்
தோளினுறவாகக் கொண்டிடும்வேலா. [வா]

அடுக்குமல்லிகை—என்ற மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி

கண்ணிகள்

குறக்குலமானைத்தேடி ஏகினார்—சூரசம்மாரன்
குறக்குலமானைக்கூடி நல்கினார்—அங்கு
குறக்குல மாதை நாரதர் கண்டிடக்
குமரனம் மாதைத் தாரமாய்க் கொண்டிடக். [குற]

சித்தசன் கொக்கோக லீலைபுரிந்திட—நித்த நித்தம்
மெத்தமெத்தப் பிரமைகொண்டே யலைந்திட—கந்தன்
சிந்திப்பதாச்சுதே சிமிழ்சின்னத்தன
சிறு மடந்தையாள் சிங்காரியான [குற]

செகமெல்லாம் பொற்றுஞ் செல்விநாதன் மருகன் செந்தி
[லாதிபன்
சித்தசன் மைத்துனன் செஞ்சேவற்கொடியான்—சீர்
செந்திற்குகந்தயென் சிவசுப்ரமண்யன்
சேயன் செல்லத்துரை சாதிக்குங் கண்யன் [குற]

துலங்குசெம்பொன் -என்ற மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

செந்தமிழ் சொல்லும் செல்லத்துரை
செய்யுட்கருள் புரியும் பால
சுப்ரமண்யக்கடவுளே—செந்தின்மாநகர்
சுப்ரமண்யக்கடவுளே (செந்)

செஞ்சமரை மாயுமாயக்கார
சூரனை யரியும்பால
சுப்ரமண்யக்கடவுளே—செந்தின் மாநகர்
சுப்ரமண்யக்கடவுளே (செந்)

அநுபல்லவி

சிதைவுற நகைபுரி சிவன் மனமகிழுப
சாராயென்னை யாதரிபால
சுப்ரமண்யக்கடவுளே—செந்தின்மாநகர்
சுப்ரமண்யக்கடவுளே (செந்)

சரணம்

பன்னிருகரனே
பன்னிருகண்ணனே
பரவையாள்லீலைக்
பாரிற்புகழ்ந்தோன்

பாவையரின் மோகா
பாரென்னை யாள்குகா
குகந்தோனே முருகா
பாரென்னருகா

ஆறுமுகமானவேலவா
யாரென்றறியாயா (செந்)

மயிலே உன் சாயல்கொண்ட—என்ற மெட்டு

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி

பல்லவி

அம்பிகைபாலனே அருள்புரிவேலவனே (அம்)

அநுபல்லவி

தென்பரங்குன் றாறுமுகனே
அன்புடனு தரிபூமானே (அம்)

சரணம்

அண்டர்புகழ் கரனே
திண்டோள்நிறை பரனே
வண்டார்குஞ்சரி தீரனே
அண்டினேனு ளரனே (அம்)

தொகையறா

செந்திற்பதிவாழுஞ் செங்கல்வாராயனே
செங்கண்மான் மருகா
வந்துபணிந்தேனெனக் கருள்தருவாயே
தானவர்கோமானே

(சரணத் தொடர்)

செல்லத்துரை செப்பிடும்
செந்தமிழை ஒப்பிடும்
செகமதைக் காத்திடும்
செயல்கருணை வைத்திடும் (அம்)

சிங்கார மன்னி சொல்வேன்—என்ற மெட்டு

இராகம்—அபுரூபம்—தாளம்—ஆதி

பல்லவி

ஆங்காரமென்னசொல்வேன் அய்யன்முருகேசாமன (ஆங்)

அநுபல்லவி

ஆரரிவாருனை அய்யன்
ஆறுமுகா பன்னீர்கையன்
கூறும்பஞ்சா க்ஷரமெய்யன்
கூடிமரு வியதுய்யன் (ஆங்)

சரணம்

தேவாதிதனைக்காத்த தேவகுணகானே
திருவருள்பொழி துரந்தரனே சுந்தரனே
தஞ்சமென்று நம்பினேன் திருகுருபரனே
தமியெனைக்காத்தருள்வாய் பன்னிருகானே

தேசிகனேயானுமுன்னை நித்தம் நித்தம்
தேடினேனுன்னையென்னை சித்தம் சித்தம்
தந்துநீயே காப்பதென்னை யுத்தம் யுத்தம்
தவறுமலேவந்துஉன்னை முத்தம் முத்தம்

தந்திடும் வள்ளி
தெய்வானையை மணந்த
தெய்வதம் நீயே
தெரிசிய மீய (ஆங்)

ஹாயமூஜே—என்ற மெட்டு
இராகம்—இந்துஸ்தான் பியாக்—தாளம்—ஆதி

பல்லவி

எந்தன்மீதுகருணை இன்னமுமில்லையோ—கந்தா (எந்)

அநுபல்லவி

எந்தந்தையேயுன்னை ஏற்றித்தொழுதேன் இனி
உந்தனருள் தருவாயே உயர்திரு
உந்தனருள் தருவாயே (எந்)

தொகையறா

அமரர் முனிவர் போற்றுமம் புஜவாகனனே
குமரகுருபரனேயருள் சாற்றுங்கோரினனே

பரமப்ரணவ மேற்றிப்பிரகாசித்தவனே
பாவியனுதின மாற்றலருளாறு முகவனே

செந்திற்பதியானே சீருள்ள கந்தனே
செல்லத்துரையைப் பார் எந்தன் சாந்தனே
செல்விநாதன் மருகா சங்கரன் மைந்தா
செல்வம்பெருக சங்கம் வாந்தா [எந்]

பேசாதிருப்பதேண்டி —என்ற மெட்டு

இராகம்—எதுகுல காம்போதி—தாளம்—ஆதி

பல்லவி

வாராய் வடிவேலனே
மகிழ்ச்சியுற்றே ஞனே [வாரா]

அநுபல்லவி

வாதேன்வடி வேலவனே யெந்தன்
மனத்தினருகா மாயன்மருகா [வாரா]

விருத்தம்

ஆறுமுகா எனக்கிசைந்த அன்னை பார்வதிக்குதித்த
முருகா மயின்மீதேரியிங்கு வருவாயென்
னருகா நற்குணம் தந்தருள் புரிந்தென்னைக் காக்க
வருவா யிதுசமயம் வள்ளிதெய்வானையுடன்

சரணம்

செந்தூர்வாசா செகம்புகழும்
தேசிகா முருகேசனே
செந்தமிழ்சொல் செல்லத்துரை
நற்றமிழ்தனக் கருள்புரிந்திட [வாரா]

தாயே நமஸ்காரம் - என்ற மெட்டு
இராகம்—தோடி — தாளம்—ஆதி

சரணங்கள்

மாயோனின் மருகா மனமகிழ்ந்தெனைக் காரும்
மயூரமீதேரிய மாயாமாயக் குமாரா--மன
மிரக்கம் வைத்துக் காரும் — மன
மிரக்கம் வைத்துக் காரும்—அதி

புத்தர்தனை வென்றுமுனம்
வெற்றி புரிந்தோனே [மாயோ]

நானேயுன்னைத்தேடி மனமகிழ்ந்து நாடி
நானேயுன்னைநாட மனங்கலங்கி வாடி-வந்தேன்
காத்தருள் புரிவாய்—நித்தம்
காத்தருள் புரிவாய்—உன்
சித்தமிரங்க தாமதமேனோ
சித்தசன் மைத்துனா [மாயோ]

சோதிற்குகந்த கந்தா   செல்லத்துரையைக் காரும்
துங்கானுக்குகந்த மைந்தா   செந்தமிழைப் பாரும்-இதை
கேட்டருள்   கூறும்—இதை
கேட்டருள்   கூறும்—எந்தன்
காத்தா னுன்னைத்   தொழுவேனெனைச்
சிறப்புடன்   காரும் [மாயோ]

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி

பல்லவி

செந்தூர்—முருகையா யானுனது தஞ்சமையா
அங்கு தாமதமாய் நில்லாதைய்யா தாசனன்பு பொல்லா
தைய்யா [முரு]

அநுபல்லவி

மனவேதனையைத் தீராய்   மகிழ்ந்தென்னை நீ பாராய்
மனமகிழ்ந்திங்கு வாராய்   மனமுருகா வரந்தாராய்
[முரு]

சரணம்

சிவ—சுப்ரமண்யாவுந்தனையான் கோரினேன்—இங்கு
செல்லத்துரை செந்தமிழ் கேட்டெனைக் கண்பாராய்-இனி
சகல கலைஞானம்   யோகமதைத் தாராய்
சீர்பாதம்   பணிந்திட—

சிந்தை மகிழ்ந்திட
சேயன் புகழ்ந்திட—செந்தூர் [முரு]

பொழுது விடிந்தது தாயே—என்ற மெட்டு
இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

அடிபணிந்தேன் முருகோனே யானு
பினியுனக் கடுமை யென்றினிதுடனுன் பாதம் [அடி]

அநுபல்லவி

திருவருள் செய்குவாய் தேவா சண்முகநாதா
திருவருள் செய்குவாய் தேவா சண்முகநாதா [அடி]

சரணம்

செல்லத்துரையுனை யனுதினஞ்சாற்றிட
செந்தின் முருகா யென்னை யனுதினம் போற்றிட
சேயன் சொற்கவிதனை யனுதினமேற்றிட
சுயகல்விக்கருள் தனை யனுதினந்தேற்றிட (அடி)

அடங்காது அடங்காது—என்ற மெட்டு
இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

அலங்காரம் அலங்காரம் அய்யன்பதியே—சீர் (அல)

அநுபல்லவி

அங்குதங்குமண்டபமும் அடியாரோங்குமணித்திபமும்
எங்கெங்கு மண்டகமும் இசைதங்குந் தெந்தினமும்
ஓங்கு மத்தளமே—ஓசைதித்திமேளமே—உயர்மணித்தா
ளமே சீர் (அல)

தங்கத்தினுற் சப்பாமும் தகுந்தநல்லாரம்பமும்
அங்கத்தின்னுமும் ஆடிடு நற்பம்பரமும்
தாங்குதில்லையே—சங்கு மங்குதில்லையே—எங்குங்கண்ட
தில்லையே சீர் (அல)

கோட்டை நற்கொத்தளமும் கோணமிகு சதுர்வளமும்
கட்டியங்கைத்தாளமும் காணவெகுநீர்வளமும்
நாட்டராத்திரமே—நடுவோது மந்திரமே—நெடிலிரண்டு
கோபுரமே சீர் [அல[

ஆடிடுநற்காவடியும் ஆங்காங்கு சேவடியும்
நாடிடுநன்மாளவியும் நங்கைபாகன் நவமணியும்
கூடிசொலிக்குதே—நடுப்பூசையாகுதே—ஜனம்நாடிப்போ
குதே சீர் [அல]

செந்திற்கந்தன் காட்சியும் செல்லத்துரை மூர்த்தியும்
சிவன் மைந்தனுட்சியும் சிவஞானக் கண்காட்சியும்
சீரான வள்ளிதன்னை—கொஞ்சும் செல்வனே—சிரசாறு
முகவனே சீர் [அல]

காட்சி கண்காட்சியே—என்ற மெட்டு

இராகம்—தேசிகம்—தாளம்—ரூபகம்

பல்லவி

காட்சிகண்காட்சியே செந்தூரினலங்காரம் [காட்]

அநுபல்லவி

கந்தனருமையும் கடலலைபெருமையும் [காட்]

முருகையாநித்தியமும் குமரய்யா வசத்தியமும் [காட்]

சரணம்

தாசில்தாரவர்களும் தாலூகாக் கச்சேரிகளும்
தேரோடு வீதிகளும் தெருவெல்லாம் பந்தல்களும்
சப்மாஜிஸ்ற்றிரேட்டவர்களும் சப்னிஸ்பக்ற்றரவர்களும்
ஷாப்புக்கடைகளும் போலீஸ்ப் புலிகளும்

பார்க்கப் பார்க்க அதி தேட்டம்—எங்கும்
பிர்மகுல ஜாதியின் கூட்டம்—தங்கும்
பாதேகி பாட்டைசாரி நாட்டம்—ஓங்கும்
பாத்தையர் தாசிவெகு சிரேட்டம்

சிங்காரச்சது ராடிட
செந்திலாதிபர் நாடிட
செகமெலலாம் பாடிட
செல்லத்துரை கொண் டாடிட—கந்தன் (கா)

மானேயங்கே போனவகையென் னடி—என்றமெட்டு

இராகம்—அடாணா—தாளம்—ரூபகம்

பல்லவி

நானேயுனதடிமையானேன் வடிவேலே மயில்
வாகனமீதி லமர்ந்திடு வேலா (நா)

அநுபல்லவி

வானோருங்கண்டால் வணங்கும் வேலவனே
ஏனோசித்தமிரங்க வில்லைவேலா (நா)

சரணம்

எண்ணிலா தமகிழுன்னாலடையேனோ ஏகாந்தனே நானே—கோடி
புண்ணியமுண்டய்யா யென்னையாதரித்திடில் பூமானே நீ தானே
வண்ணமுகவழகா வாய்திறவாயோ வேலா
வாவண்ண மயிலேறி யிங்கெனக்கோர் வரந்தந்திட (நா)

தன்னகத்துக்குள்ளேயொளி மின்னலைப்போலவே தோன்றுவேல் சூதே—மன
மின்னுமிரங்காமல் சொன்னதுங் கேளாமலென்னை வருத்தாதே
கண்ணியனேமுன்செய்த புண்ணியத்தாலேயிக்
காலந்தனிலேயுந்தனைக் காணும்படியாய்வந்தேன் (நா)

உத்தமனே நவரத்தினமே மனமொத்துவருவாயே—நான்
கத்தியழைத்துங்கேளாதவன்போல காணுதுபோருயோ
சத்தியமேசொல் செல்லத்துரை யுந்தன்
செந்தாமரைப் பாதமதை யனுதினமே துதிபணிந்தேன்
(நானே)

விலைதப்பியதுற மான்களே —என்ற மெட்டு

இராகம் —நாதநாமக்கிரியை— தாளம் —ஆதி

பல்லவி

மயூரவாகனு இதுவென்ன கஷ்டம் எந்தன்
மனமதுவாடினேன் பொல்லாக்கஷ்டம் (மயூர)

சித்தமிகத் துடிக்குது சினமிகச்சோருது
தேடிக்கரங்குவித்தும் சூதுசெய்வதேதகாது (மயூர)

சரணம்

அண்டினேனுன்னை ஆதரிப்பா-யென்னைக்
கண்டுமனமகிழுங் கந்தப்பா
தண்டுப்பத்தூரில் வாழுந் தாசனப்பா
தொண்டுகவிபாடுஞ் செல்லத் துரையப்பா (மயூர)

எங்குமினிக்கேலி யாகுமே சும்மா
என்னைவிட்டான்மனம் நோகுமே
மங்கைபாகாஞானம் சித்திக்கவே
மைந்தனுன் மேன்மனம் சாதிக்கவே (மயூர)

மறையாகமமாகிய மான்மருகா — இந்த
பிறவிப்பிணி நீத் திடுவாய் முருகா
மாராமலேயுனது பாராயண முறையருகா
மருவிவள்ளிகுஞ்சரி யிருபுரத்தினுங் கொஞ்சுஞ்சுகா (மயூர)

நொண்டிச்சிந்து

செந்திநகர்ப்பதி யாளும் நல்ல
சங்கரனுக்கு மைந்தனென்று வாழும்
ஆறுமுகமென்றபெய ருண்டு நமசன்
ஆண்மையிலே மிகுந்தசமர்த்து முண்டு
கலவியிலதி மோகன் நயகன்
காரிகையிருவருடன் கூடிய போகன்
சூரனைசம்மாரஞ் செய்தான் நம்பல்
சொருசானவள்ளி தனைமண மெய்தான்
தாசிகள்சது ராடிட அதில்
தேவதாசி சின்னத்தாய்பேலாசை கொண்டிட
கந்தனவள்வீடு சென்றார் அவள்
காசிதந்தனையுமெனக் கந்தன் குன்றினர்
தாழ்வடத்தைப் பிடித்துக் கொண்டாள் முருகன்
தாவியாவி பாதவித்ததைக் கண்டாள்
ஆங்காரக்காரி யவள் அண்டை
நங்கைமே லிச்சைகொள்ளாதெனச் செப்பினள்

சரிபதிகந்த ளேடவே அங்கு
சேயசெல்லத்துரைசுய கீதம்பாடவே
கந்தனருள்தானே கொடுக்க எங்கும்
கந்தப்பா சொந்தப்பாவெனவே துதிக்க
கந்தனருள்தானே கொடுக்க (செந்தி)

ஸ்ரீராமச்சந்திரன்செய்தி—என்ற மெட்டு

இராகம்—அப்லதவதி—தாளம்—ஆதி

பல்லவி

சிவசுப்ரமண்யனே நான் உனைப்புகழ்வேன்
ஸ்ரீயரிமருகா சிந்தைமகிழ்வாய் (சிவ)

அநுபல்லவி.

நானேயுன்னைத் தாவித்தாவிக்கூவ
நீனேமனமிரங்கா திருப்பதேனோகாவா (சிவ)

சரணம்

நோயெனதுமுனம் வாராயுனது பதம்
நேமுடன்பணியச் செய்வாய் செந்தில்வேலா
சூரர்குழாங்களையே வேரக்கொன்ற தீரா
சூரனே நீயெனை யாண்டருள்புரிவாய் (சிவ)

நந்தாமயூரனே சேந்தனுதாரனே
மைந்தன் செல்லத் துரைபணிபரனே

செந்தின் முருகோனே சூலபாணிகானே
சிந்தைகலங்கினேன் சிருபதேசந்தா (சிவ)

இராகம்—இந்துஸ்தான்—கமாசு—தாளம்—ஆதி

(கண்ணிகள்)

வேதனையாகுது கந்தனே என்செய்வேன்
மாயன்மருகா பாவம்பொருப்பாயே (வேத)

வருவாவருவாயென்று தருவா வாமேயென்று
வழிமேல் விழிவைத்து வாடிக்கொண்டிருந்ததி (வேத)

வாவா வெகுநோமாச்சு வந்துன்னருள்தா
வள்ளிதெய்வானையுடன் வருவாயாறுமுகா (வேத)

செல்லத்துரையுனே எத்தனைசொல்லியும்
நல்லின்பசுகந்தரும் நங்கையிற் சென்றாயோ (வேத)

வண்ணமயிலேறி வருவாய் தேரிலேறி
வந்தருள்தாமலே வாடித்திரிந்ததி (வேத)

ஜோதிசுந்தா சொரூபம்—என்ற மெட்டு

இராகம்—மோகனம—தாளம்—சாப்பு

பல்லவி

தேவர்கள் போற்ற சொலிக்கு
சிங்காரனே தேவ (தேவர்)

அநுபல்லவி

அங்கந்தனிலெங்கும் மங்காத்
தங்கந்தலங்கி விளங்கிடு முருகோனே (தேவர்)

சரணம்

பாலன் செல்லத்துரை யுனக்குமக னல்லவோ
பாலித்தடியவர்க்கென்றுநன்மை பாரே
கூலித்தருள்புரி செந்தூர்க்குமரா கந்தா வாழ்திரு
காலித்தருள் வடிவேலா கயமுகவனுக்கிளைய

வேல்மயில்வீரா வள்ளிகுஞ்சரி
சொல்லிடுந்தீரா செல்வனருகா
நல்லருள்புரியா நயமுடன்வாரா
நூல்கவிபாட நீயுறவாகத் (தேவர்)

கட்டளைக் கலித்துறை

செப்பிட நான்மறையாலுமொண்ணாத நின்சீரதனை
யெப்படி நானறிவேன் றொழுவேன் றுதிப்பேனெனை நீ
யப்படியிப்படி யென்றிகழா துவந் தாண்டருள்வாய்
மைப்படி கண்ணுமை பாலாநிசாசரர் மாரகனே

பார்ஸி மெட்டு—தாளம்-ஆதி

பல்லவி

கந்தன் கருவஞ்சொல்ல வென்னை லாகுமோ குஞ்சரியின்
(கந்தன்)

அநுபல்லவி

சிவபிரானுக்குதித்த செந்திலாறு முகனும் (கந்)

சரணம்

அகன்ற மார்பழகுக்கு ஆகுமோதான் பூமியும்
புகன்றிட வெனனுலில்லை பாரம்புஜத்திற்கீடு (கந்)

ஆறுமுகவழகும் ஐயன் சடையழகும்
வீராறு காமும் எங்குங்கண்டதில்லை (கந்)

சூரனைச் சங்கரித்து செந்திநகராட்சியும்
சுந்தரன் காட்சியும் செகததுக்கு ரட்சிப்பும் (கந்)

ஜீவகாருண்யனுக ஜீவராஸிகளைக்காத்த
செந்திலாதிபன் செல்லத் துரைக்கருள் கொடுத்த கந்)

இராகம்—கானடா—டோரா

ஸ்ரீயரிமருகா ஜெயங்கொண்ட வீரா
சங்கரன் மைந்தா சரவணபவனே
அன்னை பார்வதியின் அருந்தவபுத்ரனே
அமரருக்கனுகூலமான வேலனே
வஞ்சகசூரனை வானுலகேற்றிய
வடிவேல் முருகா வீரசூரனே
வனத்தின்கண் ணாதர்கண்ட
வள்ளியை மணந்த குணகரனே

செந்திலாதிபா மனம் சாதித்தேனே
செல்லத்துரைக்கே மனம் சாதிப்பாய் நீயே

கட்டளைக் கலித்துறை

மாரனைக்காய்ந்தோன் குமாரனைத் தேவர்க்குமா றிலுப
காரனைச் சூரசங்காரனைத்தூய கடப்பமலர்த்
தாரனைமுதத்க்கு தாரனைச்செல்வி தழைத்தருள் செந்
தூரனை வெற்றமயூரனை நயமனத்துனை னுவமே

பாரஹிராம — என்ற கீர்த்தனைமெட்டு

பல்லவி

தாவியுன்னைத் தேடிவந்தும் தீரனே நீ யெங்குசென்றாய்
(தாவி)

அநுபல்லவி

ஆவிபா தவிக்குதையா அயனேயான் என்னசெய்வேன்
(தாவி)

செய்கருணை தருவாவேலா செல்லத்துரையுன்னடிமை
[தாவி]

வந்தஸபையோர்க்கு—என்ற மெட்டு

இராகம—இந்துஸ்தான்—தாளம்—ஏகம்

கண்டேன் கண்டேன் எந்தன் கந்தன் வரக்கண்டேன்
(கண்)

அநுபல்லவி

கண்டுகொண்டேன் கருத்துக்கேதாவே

சரணம்

அண்டர் புகழும்பாதனை அடியேன் நான்கண்டேன்
சண்டாளச் சூரனைச் சங்கரித்தச் செந்தூரில்
ஆண்டருள் புரியும் ஐயன் முருகேசனை
அகிபுஜமீதினில் அமர்ந்திருந்ததைத்
தாவிசோ செல்லத் துரைகண்டு
கூவியோர் வரம்பெற கந்தனை யன்புடன் (கண்)

புள்ளிக்கலபமயில்—என்ற மெட்டு

கண்ணிகள்

செந்திற்குகந்தமுரு கேசன் சேயன்
சோசெல்லத்துரைமகிழ் நேசன் சீர்
செந்திற்பதியாளுஞ் செஞ்சேவற் கொடியான்கிகி மீதமர்ந்திடும்

புள்ளிக்கலபமயிற் பாகன்—பாவை
வள்ளிதெய்வானையதி மோகன் வேகி
துள்ளிவிளை யாடுவதைக் கண்டன்புடன் களிக்குந்தீரன்

செகமெல்லாந் துதிக்குங் கந்தன் சத்தி
சங்கரனுக்குதித்த மைந்தன் அங்கு
சூரன்தலை சீக்கிரங்கொய்து சொகுசுடனே மணமே செய்தான்

வீரவாகு தேவருடன் வந்து நல்ல
சிறப்புடன்றேரிலேறி யமர்ந்து திரு

சிங்காரத்தேரை யதிவேகமாய் தெருக்கள்சுற்றிப் பதியே
கினர்
சங்குநாதச் சத்தமெங்கு முழங்க சாமி
தங்குமிடங்களெல்லாம் துளங்க தனிப்
பூசையாகுதே பூலோகம்வணங்க பார்வதிகுமாரன்
பார்த்தருள்கொடுத்தான்

சாதாமுககுகா—என்ற தியாகருஜ கீர்த்தனமெட்டு
இராகம்—தோடி—தாளம்—ஆதி

பல்லவி

வா வள்ளிமணாளனே யுனைப்பணிந்தேன் (வா)

அநுபல்லவி

சூலபாணியருள் நீ
பேணியே பணிந்தேன்
சூராதியரை வேரக்கொன்ற
தோகைமயிலோன் (வா)

சரணம்

நீவருவாய் வடிவேல்
செப்பநேரமா
பாலன்வருந்தவா—சுப்ரமண்யா
செல்லத்துரை யுன்னைநான்
சேவித்தேன்பாதம்

ஷண்முகக்கடவுளே
சரவணபவனீ
சுப்ரமண்யவனே நீ (வா)

கட்டோணி இவள் சாதி—என்ற மெட்டு
இராகம்—காப்பி—தாளம்—ஆதி

பல்லவி

கந்தாவோர்வரந் தருவாய் உன்
மைந்தனுக்கருள்கொடுக்கவே வருவாய் (கந்தா)

அநுபல்லவி

சேயன்செல்லத்துரைக் காதளித்திடு மீசனே
செந்தின்மாநகரில் வாழ்ந்திடு முரு கேசனே
செல்விகளிருபேரை மணந்திடும் நேசனே
செகத்துக்கெல்லா.மருள்கொடுத்திடும் பாசனே (கந்தா)

சரணம்

அவுணர்கள் பகையை முடித்திட்ட வேலனே
ஆங்காரங்கொண்டவனைச் சிறையிலிட்ட சீலனே
ஆறுமுகமாயங்கே மாலையிட்ட லோலனே
ஆதரித்திடவே யென்மேன் மனம்வைத்திட்ட சூலனே

சுத்தன் குரலோசையைக்கேட்டும் உன்
சித்தமிரங்கியருள் காட்டும் என்
பத்திவைத்தேனெனைப் பாராட்டும் பின்
நித்தியமுனைத் துதிப்பேன் நினைப்பூட்டும்-இன் (கந்தா)

இராகம்—தோடி—தாளம்—ரூபகம்

பல்லவி

காத்தருள்வாய் தயாபரனே [காத்]

அநுபல்லவி

கார்த்திகேயக் குமாரா
கருணைதர வாரா [காத்]

சரணம்

கெஞ்சக்கெஞ்ச மிஞ்சுவதேன்
கொஞ்சமாகிலும் நெஞ்சமிரங்கு
வஞ்சங்கொள்ளாதே நெஞ்சம்பொல்லாது
தஞ்சமென்றேன் சஞ்சலமகற்று
முருகாவள்ளிதனை மணந்திட்டவேலா
அருகாசூரன்தனை யறுத்திட்ட லோலா
வருவாவாஞ்செல்லத் துரைக்கீய்ந்திட்ட சூலா
தருவாநற்கருணைத் தயவாயுதித்திட்ட சீலா
உகந்திடு வந்திடு தந்திடு [காத்]

கட்டளைக் கலித்துறை

வாயொன்றுபேச மனதொன்று நாடபிவ்வண்ணமிவை
யேயொன்றினேடொன்றெ திராடி நிற்குமிடையிலிந்த
நாயொன்றுனக்கன்பு செய்துய்யுமோ வள்ளிநாயகனின்
சேயொன்றெனப் புரந்தா வாயிரங்கியுன் சித்தம்வைத்தே

தெம்மாங்கு மெட்டு

ஆறுமுகத்தழகா ஐயன்பதியழகா
யீராறு கையழகா யிருவருடன் மகிழழகா
ஆசானேயே குருவே
தாசனுக்கோவரந் தருவா (ஆறு)
அன்னமயிலழகா அடியேனைக் காருமையா
வண்ணமுகவழகா வாடினேனே முருகையா
செல்லத்துரை சொக்கி- னேனே
நல்லருள் புரிவாய் நீனே (ஆறு)
மாதாபிதா குருவே மாலினுட் மருமகனே
வாதா சூதாயிதுவே உமையவளின் திருமகனே
மறவாத வள்ளி நேசா
மருவிய குஞ்சரி பாசா (ஆறு
நானே யுனதடியைப் போற்றினே னனுதினமே
நீனேயருள் புரிந்து சாற்றிடுவா யித்தினமே
நாரியரின் கலவி போகா
காரிகைமேலதி மோகா (ஆறு)

கட்டளைக் கலித்துறை

மாலுக்கு நல்லமருகன் குகன் கந்தன் வாழ்குமரன்
நாலுக்கு நாயகன் போரூர் முருகனளினமலர்
கா லுக்குத்தண்டை கருணைக்குத் தோத்திரம் கற்றதெல்லா
வேலுக்கபயம் மயில்வாகனத்திற்கு விண்ணப்பமே [ம்

இராகம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

ஜெய ஜெய மங்களமென்
ஜென்மவிமோசனம் [ஜெய]

அநுபல்லவி

மங்கை சிவகாமிக்கும் எங்குநிறைந்தசேமிக்கும்
சங்கீதவாணிக்கும் சாலோகசாமிக்கும் [ஜெ]

அரசனுக்கும் நம்மரசிக்கும்
அன்புடன்வாய்ந்த பார்லிமெண்டுக்கும் [ஜெ]

செந்தின் முருகனுச்கும் செல்லத்துரைக்கும்
செந்தமிழுக்கும் சொல்லுமவருக்கும் [ஜெ]

செல்வரஸ கீர்த்தனம்

முற்றுப்பெற்றது

சுபம்!

600.008

முந்துங்கள் ! முந்துங்கள் ! !

உ

செட்டியார்பத்து

மக-ள-ா-ஸ்ரீ

செ. எம். துரைஸ்வாமி நாடாரவர்களாற்

கணிக்கப்பெற்ற

துந்துபி வர்ஷ வாக்கிய

பஞ்சாங்கம்.

சொற்ப காப்பிகள்தானிருக்கிறது.

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

விலை அணா 4.

செ. எம். துரைஸ்வாமி நாடார்,
செட்டியார்பத்து,
உடன்குடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா.

செல்வரஸ கீர்த்தனம்

பிரதியொன்றுக்கு விலை அணா 3. தபாற்கூலியுடன் அணா 3—6. 10 காப்பி வாங்குபவர்கட்டு 1-ம், 100 காப்பி வாங்குபவர்கட்டு 20 காப்பியும் கமிஷன் கொடுக்கப்படும். [illegible]சத்தவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

S. Sellathurai Nadar
Manadu Thanduppathu
Mengnanapuram P. O.
Tinnevelly District.

சோ. செல்லத்துரை நாடார்,
மாநாடு தண்டுபத்து,
மெஞ்ஞானபுரம் போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா.